**செய்தி வெளியீடு எண்:141** **நாள் :01.03.2016**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(1.3.2016)** தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் **272** கோடியே **68** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **4044** அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தின் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டு வசதி, குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டப் பணிகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாபெரும் தொலைநோக்கினை அடைய அனைத்து குடும்பத்திற்கும் நிரந்தர வீடு இருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாட்டினை குடிசைகளற்ற மாநிலமாக மாற்ற வேண்டும். இந்த இலக்கினை அடையும் விதத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கடந்த **5** ஆண்டுகளில் நகர குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்காக **2683** கோடியே **42** லட்சம் ரூபாய் செலவில் **60,595** அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக **34013** குடியிருப்புகள் தமிழகத்தின் நகரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் **1411** கோடியே **59** லட்சம் ரூபாய் செலவில் கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் மட்டுமல்லாது, திருநங்கைகளுக்கும் நிரந்தர வீடுகள் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில் அவர்கள் பால் அன்புள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **260** அடுக்குமாடிக் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு சமுதாயத்தில் உயரிய அந்தஸ்தும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம், சென்னை – பார்த்தசாரதி நகர் திட்டப்பகுதியில் **128** அடுக்குமாடி குடியிருப்புகள்; சத்தியவாணிமுத்து நகர் திட்டப் பகுதியில் **392** அடுக்குமாடி குடியிருப்புகள்; நேரு பார்க் (பி.எச்.ரோடு) திட்டப் பகுதியில் **288** அடுக்குமாடி குடியிருப்புகள்; பிள்ளையார் கோயில் தெரு திட்டப் பகுதியில் **32**

அடுக்குமாடி குடியிருப்புகள்; லாக் நகர் திட்டப் பகுதியில் 304 அடுக்குமாடி குடியிருப்புகள்; ஆண்டிமான்ய தோட்டம் திட்டப் பகுதியில் 48 அடுக்குமாடி குடியிருப்புகள்; கோட்டூர்புரம் திட்டப் பகுதியில் 136 அடுக்குமாடி குடியிருப்புகள்; காஞ்சிபுரம் மாவட்டம் – நாவலூர் திட்டப் பகுதியில் 2048 அடுக்குமாடி குடியிருப்புகள்; கோயம்புத்தூர் மாவட்டம் – சுண்டக்காமுத்தூர் மலை நகர் திட்டப் பகுதியில் 224 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் சூலூர் திட்டப் பகுதியில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்; ஈரோடு மாவட்டம் – சூரியம்பாளையம் திட்டப்பகுதியில் 204 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 272 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4044 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்து, இக்குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கும் அடையாளமாக 6 குடும்பங்களுக்கும், மேலும் 5 திருநங்கைகளுக்கும் ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்கள்.

இக்குடியிருப்புகளில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, பால்கனி குளியலறை, கழிப்பறை ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குடியிருப்புக்கும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 8 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் வரையிலான செலவில் 396 சதுர அடி வரை கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வசதிகளான தார் சாலை மற்றும் கான்கிரீட் நடைபாதைகள், குடிநீர் விநியோகம், கழிவு நீர் அகற்றும் வசதி, மின்விளக்குகள், மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. ச.வி. சங்கர், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பி. சிவசங்கரன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 1.3.2016